SWOAD

# SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT

## அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.

# ஆண்டறிக்கை - 2013

# உள்ளடக்கம்.


01. அறிமுகம்.

02. தொலைநோக்கு / **Vision**

03. பணிநோக்கு / **Mission**

04. குறிக்கோள்கள் :

05. இலக்குக் குழுக்கள் :

06. பணியாற்றும் பிரதேசங்கள்

07. நிறுவன முகாமைத்தவக் கட்டமைப்பு.

08. பணியாளர்களின் எண்ணிக்கை விபரம்.

09. அங்கத்தவர்களின் எண்ணிக்கை விபரம்.

10. நடைமுறைப்படும் திட்டங்கள்.

11. நிதி வழங்கிய நிறுவனங்கள்.

12. பணியாளர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்.

13. நடைபெற்ற நிகழ்வுகள்.

14. இவ் வருடம் எமது அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.

## 01. அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல்களினாலும், அரசின் இனஒதுக்கலினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நன்நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை கருத்தில் கொண்டு **திரு.சன்முகம் செந்துராசா** அவர்களினால் **1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி** அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் தமிழ்,முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 58 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 4841 அங்கத்தவர்களையும், 71 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

## 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

## 03. பணிநோக்கு / Mission

“விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும் ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுமுள்ள பணிக்குழாம்களைக் கொண்ட அமைப்பு.”

## 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

## 05.இலக்குக் குழுக்கள் :

1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.
9. வெளிநாடு சென்ற குடும்பங்கள்.

## 06. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.

| | | |
|---|---|---|
| 01. பொத்துவில் | - | 9 |
| 02. திருக்கோவில் | - | 18 |
| 03. நாவிதன்வெளி | - | 10 |
| 04. கல்முனை | - | 9 |
| 05. சம்மாந்துறை | - | 6 |
| 06. காரைதீவு | - | 5 |

## 07. நிறுவன - முகாமைத்துவக் கட்டமைப்பு.



## 08. பணியாளர்கள் விபரம். (December-2010)

| இல | பணியாளர் | ஆண் | பெண் | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட மட்டம் | 14 | 08 | 22 |
| 2 | பிரதேச மட்டம் | 06 | 06 | 12 |
| 3 | கிராம மட்டம் | 0 | 15 | 15 |
| 4 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 0 | 22 | 22 |
| | **மொத்தம்.** | **20** | **51** | **71** |

## 09. அங்கத்தவர்கள் விபரம்.

| இல | பிரதேசம் | மொ.அ. எ-கை. |
|---|---|---|
| 1 | பொத்துவில் | 672 |
| 2 | திருக்கோவில் | 1543 |
| 3 | காரைதீவு | 478 |
| 4 | கல்முனை | 649 |
| 5 | சம்மாந்துறை | 671 |
| 6 | நாவிதன்வெளி | 828 |
| | **மொத்தம்** | **4841** |

## 10. நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

01. **சேமிப்பு, கடன் திட்டம்** :- சேமிப்புக் கடன் திட்டச் செயற்பாட்டின் கீழ் இவ்வாண்டில் 6 பிரதேசங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 2229 அங்கத்தவர்களுக்கு 76,141,377.09 ரூபாய் நிதி கடனாக வழங்கப்பட்டதுடன், இவ் வருட சேமிப்பாக 5,105,085.47 ரூபாய் நிதியும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதேசரீதியான கடன், சேமிப்பு விபரங்கள்.**
**(2013 January to December)**

| பிரதேசம் | வழங்கப்பட்ட கடன் | அறவீடு செய்யப்பட்ட சேமிப்பு |
|---|---|---|
| பொத்துவில் | 8,597,800.40 | 652,536.83 |
| திருக்கோவில் | 31,466,896.20 | 2,062,182.46 |
| காரைதீவு | 8,636,684.04 | 554,933.13 |
| கல்முனை | 3,277,000.00 | 454,721.40 |
| சம்மாந்துறை | 9,900,173.16 | 672,643.60 |
| நாவிதன்வெளி | 14,262,823.29 | 708,068.05 |
| **மொத்தம்** | **76,141,377.09** | **5,105,085.47** |

02. மரணாதாரத் திட்டம் :- அரசாங்க உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் மாதாந்தம் 5.00 ரூபாய் வீதம் வருடத்திற்கு 60.00 ரூபாய் செலுத்தும் அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அங்கத்துவ குடும்பம் ஒன்றிக்கு மரணாதார உதவுதொகையாக முதல் தடவை 3000.00 ரூபாவும், இரண்டாம் மரணத்திற்கு 2000.00 ரூபாயுமாக 5000.00 ரூபாய் இத்திட்டத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இவ்வருடம் 62 அங்கத்துவ குடும்பங்களுக்கு 177,000.00 ரூபாய் மரணாதார உதவு தொகையாக வழங்கப்பட்டுள்ளதுடன், 232,785.00 ரூபாய் இவ்வருட மரணாதார நிதியாகவும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

**பிரதேசரீதியான மரணாதார விபரங்கள்.**
**(2013 January to December)**

| No | Division | No.Of Member | Death Subscrebtion Amount | No.Of Member | Death donation Amount |
|---|---|---|---|---|---|
| 1 | Pottuvil | 312 | 20,445.00 | 7 | 20,000.00 |
| 2 | Thirukkovil | 1117 | 86,335.00 | 18 | 52,000.00 |
| 3 | Karathivu | 231 | 25,390.00 | 2 | 6,000.00 |
| 4 | Kalmunai | 345 | 41,885.00 | 17 | 48,000.00 |
| 5 | Sammanthurai | 346 | 27,855.00 | 8 | 22,000.00 |
| 6 | Navethanvelly | 394 | 30,875.00 | 10 | 29,000.00 |
| | **Total** | **2745** | **232,785.00** | **62** | **177,000.00** |





03. வாழ்வாதாரத் திட்டம். :- நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு Diakonia அமைப்பின் நிதி உதவியுடன் வாழ்வாதார உதவி நடவடிக்கைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, இளைஞர்கள் வலுவூட்டல், பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் குழுக்களுக்கான கொள்திறன் விருத்தி போன்ற செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றன.

- குழுக்களின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, பொருளாதார முன்னேற்றத்திற்கான பல முயற்சிகள் தனிநபர் மூலமாகவும், குழுக்களின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழு உறுப்பினர்களும் வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள தங்களது ஓய்வு நேரத்தில் கூட்டு முயற்சியாக சுய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கமைவாக 6 பிரதேசத்திலுமுள்ள 267 சுவாட் குழுக்களில் 186 குழுக்கள் பல்வேறு சுய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மாத வருமானமாக ரூபா 6000/- வினை சம்பாதித்து சேமிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

- சமூர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகின்ற சிறு குழுக்களின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் நோக்கில் நடாத்தப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி நிகழ்வில் மல்வத்தையில் 11 குழுக்கள் தங்கள் தயாரிப்புக்களை காட்சிப்படுத்தி சந்தை வாய்ப்புக்களைப் பெற்று வருமானம் ஈட்டியுள்ளனர்.

- உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு இக்குழுக்களின் உற்பத்திகளை பதிவு செய்து வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொண்டு வழங்கப்பட்டதற்கினங்க 3 குழுக்கள் பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

-

- சுற்றுச் சூழல் பாதுகாப்பு 28.11.2013ம் திகதி அங்கத்தவர்களுக் பிரதேச காரியாலயத்தில் 165 மாங் கன்றுகள் வழங்கப்பட்டது. இந் நிகழ்விற்கு அப் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் , கிராம சேவை உத்தியோகத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

⦿ காரைதீவு 28.11.2013ம் திகதி லுழரவா அநநவைபெ ஏ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் பிரதேச காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 28 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு பிரதேசத்தின் தேவைகள்,பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



**04.தொழில் பயிற்சி வழங்கல்.**

மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்ட வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டலை வழங்குவதை நோக்காக் கொண்டு உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் (WUSC) 2,484,380.00 ரூபாய் நிதி உதவியுடனும், ODW (Operational Days Work) நிறுவனத்தின் 4,230,250.00 ரூபாய் நிதி உதவியுடனும் தச்சுப்பயிற்சி, மின்வினைஞர், அழகுக்கலை, குளிரூட்டி திருத்துனர், கையடக்கத் தொலைபேசி திருத்தும் பயிற்சிகளும் நடாத்தப்படுகின்றது. இத் தொழிற்பயிற்சிகளின் மூலம் 155 இளையோர்கள் பயன்பெறுகின்றார்கள்.
இத் தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக இவ்வருடம் 1,198,200.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், இப்பயிலுனர்களுக்கான மொழியறிவினை விருத்திசெய்யும் நோக்கில் ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடநெறிகளுக்கான வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளது.

**தொழில் பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் - 2010.**

| இல | தொழில் பயிற்சி விபரம் | பிரதேசம் | பயிலுனர் எண்ணிக்கை விபரம். | | | நிதி நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1 | தச்சுப் பயிற்சி நெறி. | திருக்கோவில் | 20 | ..... | 20 | ODW |
| 2 | மின்வினைஞர் பயிற்சி. | கல்முனை | 20 | ..... | 20 | |
| 3 | கையடக்கத் தொலைபேசி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 10 | 10 | 20 | |
| 4 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 20 | .... | 20 | |
| 5 | அழகுக்கலைப் பயிற்சி | ஆலையடிவேம்பு | .... | 25 | 25 | |
| 6 | பூக்கொத்துதல் | | ..... | 25 | 25 | |
| 7 | பூக்கொத்துதல் | பொத்துவில் | ..... | 25 | 25 | WUSC |

| | | | | |
|---|---|---|---|---|
| **மொத்தம்.** | **70** | **85** | **155** | |

**பயிற்சியினை முடித்துக்கொண்ட பயிலுனர்களுக்கான தொழில் உபகரணங்களும், சான்றிதழும் வழங்குதல். :-**
தாம் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறியின் மூலம் தொழில் செய்து வருமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில், தொழிற்பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிநெறியை முடித்துக்கொண்ட 70 மாணவர்களுக்கு NVQ சான்றிதழும், தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக 15,000.00 ரூபாய் பெறுமதியான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

| இல | தொழில் பயிற்சி விபரம் | மாணவர்களின் எ-கை |
|---|---|---|
| 1 | கையடக்கத் தொலைபேசி திருத்துனர் பயிற்சி. | 17 |
| 2 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | 16 |
| 3 | அழகுக்கலைப் பயிற்சி | 19 |
| 4 | பூக்கொத்துதல் | 18 |
| **மொத்தம்.** | | **70** |

## 04. சிறுவர் அபிவிருத்தி திட்டம்.

**பாலர் பாடசாலை நடாத்தல்** :- சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 17 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலையில் 22 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 214 ஆண்களும், 208

பெண்களுமாக 422 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர். இப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக இவ்வருடம் ………… ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலை பற்றிய விபரங்கள். (2013)**

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | பொத்துவில் | 01 | 17 | 01 |
| 2 | திருக்கோவில் | 07 | 202 | 10 |
| 3 | சம்மாந்துறை | 01 | 30 | 01 |
| 4 | நாவிதன்வெளி | 08 | 173 | 10 |
| | **மொத்தம்** | **17** | **422** | **22** |

நாவிதன்வெளிப் பிரதேசத்தில் எமது SWOAD அமைப்பின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்ற 7 பாலர் பாடசாலைகளுடன் இப்பிரதேசத்திலுள்ள 4 பாலர் பாடசாலைகளை மேலதிகமாக உள்ளிணைத்து World Vision அமைப்பின் நிதி உதவியுடன் Early Childhood Development செயற்றிட்டத்தின் கீழ் 11 பாலர் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு இத்திட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளில் 337 மாணவர்கள் பயின்று வருவதுடன் 17 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றார்கள்.

| No | Pre School Name | Address | Number of Total Students | Teachers |
|---|---|---|---|---|
| 1 | Parathy Pre School | 7th Colony | 30 | 02 |
| 2 | Valluvar Pre School | 15th Colony | 30 | 01 |
| 3 | Maranatha P.School | Vepayady | 36 | 02 |
| 4 | Viknesswara P.School | Savalakadi | 19 | 01 |
| 5 | Saraswathy P.School | Navithanveli | 29 | 02 |
| 6 | Kajamuga P.School | 13th Colony | 23 | 01 |
| 7 | illanko P.School | 4th Colony | 17 | 01 |
| 8 | Saraswathy P.School | 11th Colony | 40 | 02 |
| 9 | Parathy Pre School | 11th colony | 24 | 01 |
| 10 | Parathy Pre School | Annamalai-3 | 29 | 02 |
| 11 | Carmel Pre School | Sorikalmunai | 60 | 02 |
| | **Total** | | 337 | 17 |

## Early Childhood Development செயற்றிட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்.

01. பெற்றொர் கூட்டங்கள் நடாத்தப்பட்டமை
02. ஆசிரியா்களுக்கான பயிற்சி வழங்கியமை.

03. பாலர் பாடசாலைக்கான தளபாடங்கள் வழங்கியமை.
04. பாலர் பாடசாலைக்கு தேவையான சமையல் உபகரணங்கள், பாத்திரங்கள் வழங்கியமை.
05. தண்ணீர் எடுப்பதற்கும் மற்றும் வடிகட்டி குடிப்பதற்குமான பாத்திரங்கள் வழங்கியமை.
06. பாடசாலைக்கு தேவையான காகிதாதி பொருட்களை வழங்கியமை.
07. சிறுவர் பூங்கா திருத்தியமையும், புதிதாக பெயின்ட் அடித்து வழங்கியமையும்.
08. பாலர்பாடசாலை திருத்திக் கொடுத்தல்.
09. மலசலகூடத்தின் கதவு தொடர்பான திருத்த வேலைகளை செய்துகொடுத்தல்.
10. மாணவர்களுக்கு தேவையாள விளையாட்டு உபகரணங்களை வழங்கியமை.
11. மாணவர்களை ஊக்குவிக்கும் முகமான விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டமை.
12. பாலர் பாடசாலைக்கான சுகாதாரத்தை பேணுவதற்கான பொருட்களை வழங்கியமை.
13. பாலர் பாடசாலைக்கான கேற் புதிதாவும் , திருத்தியும் கொடுத்தமை.
14. வெள்ளப்பாதிக்கக்கூடிய பாலர் பாடசாலைக்கு மண் போட்டுக் கெடுத்தமை.
15. பாலர் பாடாலைக்கான பெயர் பலகை தயாரித்து வழங்கியமை.
16. கரும்பலகைக்கான பெயின்ட் அடித்து ஏற்பாடு செய்யப்பட்டடுள்ளது.
17. சுற்று கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
18. கட்டடத்திற்கான பெயின்ட் வேலைகள் செய்த கொடுக்கப்பட்டுள்ளது.

**செயற்பாட்டு முன்னேற்றம் / மாற்றங்கள்.**

- 7ம் கிராமம் பாரதி பாலர் பாடசாலை மற்றும் சவளக்கடை விக்னேஸ்வரா பாலர் பாடசாலைகள் ஆகிய இரண்டு பாலர் பாடசாலைகளும் தளம் திருத்தி பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- 10 பாலர் பாடசாலைக்கு பெயர் பலகை இடப்பட்டுள்ளது.

- 10 பாலர் பாடசாலைக்கு கரும்பலகை புதிதாக பெயின்ட் பண்ணப்பட்டுள்ளது.

- 7ம் கிராமம் பாரதி பாலர் பாடசாலைக்கும், வள்ளுவர் பாலர் பாடசாலைக்கு சுற்றுவேலி அமைக்கப்பட்டுள்ளது.

- அன்னமலை -03 பாரதி பாலர் பாடசாலைக்கு புதிதாக கேற் அமைத்து கொடுத்ததுடன் 7ம் கிராமம் பாரதி பாலர் பாடசாலைக்கு கேற் திருத்தியும் வழங்கப்பட்டது.

- 09 சிறுவர் பூங்கா திருத்தியும், பெயின்ட் பண்ணியும் வழங்கப்பட்டுள்ளதுடன், அன்னமலை -03 பாரதி பாலர் பாடசாலைக்கு புதிதாக சிறுவர் பூங்கா அமைத்துக் கொடுக்கப்பட்டது.

- 09 பாலர் பாடசாலையிலும் உடைந்து இருந்த மலசலகூடத்திற்கான கதவு திருத்தி வழங்கப்பட்டமையினால் தற்போது பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளது.

- மாணவர்களின் திறனை வெளிக்கொணரும் பொருட்டு 11 பாலர் பாடசாலையினையும் இணைத்து மாபெரும் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடாத்தி முடித்துள்ளார்கள்.

- வெள்ளப்பாதிக்கக்கூடிய நிலையில் உள்ள வள்ளுவர் பாலர் பாடசாலை மற்றும் பாரதி பாலர் பாடசாலைக்கு மண் போட்டு நிரப்பியமை.

**மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கான புகைப்படங்கள்.**

***முன்பாடசாலை திருத்த வேலைகள்.***









### *பாடசாலைக்கான உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு.*







### *பாலர் பாடாலைக்கான பெயர் பலகை இடல்.*






### சிறுவர் பூங்கா அமைத்தல்.





வெள்ளப்பாதிக்கக்கூடிய பாலர் பாடசாலைக்கு மண் போட்டுக் கெடுத்தமை

பாலர் பாடசாலைக்கான கேற் அமைத்துக் கொடுத்தமை.





**முன் பள்ளி மாணவர்களுக்கிடையே கலாச்சார நிகழ்வுகள், போட்டிகளை நடாத்தல். :-**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் பிரதேச மட்டத்தில் அமைப்பினால் செயற்பட்டு வரும் பாலர் பாடசாலைகளை ஒன்றிணைத்து இம்மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகளும், இவ்வாண்டிற்கான விடுகை விழாக்களும் நடாத்தப்பட்டு மாணவர்களுக்கான ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.










**மாணவர்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்.**

1. ஆடல், பாடல், பேச்சுக்களில் முன்னேற்றம் உள்ளது
2. எழுத்துக்களை இனங்காணுதல் சரியான முறையில் எழுதுதல்
3. ஆங்கிலத்தில் மிகவும் ஆர்வம் கொண்டிருத்தல் (பொயம்), ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதை அப்படியே கதைப்பது
4. பாடசாழைல விதிமுறைகளை சரியாக கடைப்பிடித்தல்.
5. குழச்செயற்பாட்டில் ஈடுபடல்
6. சித்திரம் வரைதலில் ஆர்வம்
7. ஒழுக்கத்தை கடைப்பிடித்தல்
8. நிறங்கள் தீட்டுவதில், இனங்காணுதல் ஆகியவற்றில் ஆர்வமாக உள்ளார்கள்
9. விளையாட்டுக்களில் ஆர்வம்
10. கூச்ச சுபாவம் இல்லாமல் முன்வருதல்
11. சுகாதாரப்பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றுவது
12. தலைமைத்துவம் போன்றன…

**பெற்றார் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றோர்களுக்கான ஒன்றுகூடலானது அமைப்பினால் நடாத்தப்பட்டு வருகின்றன. இப் பெற்றார் நிர்வாகத்தினால் மாணவர்களுக்கான சீருடை, மதிய உணவு மற்றும் நிகழ்வுகளுக்கான பங்களிப்பு, சிரமதான நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. அத்தோடு மாணவர்களின் கற்றல் மற்றும் உடல் மற்றும் உள ரீதியான மாற்றல் அதிகரித்துள்ளது.





**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடாத்தல்.**

பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் முகமாக முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளிணைத்து 2நாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 05. பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள்.:-

சமூகத்தில் பெண்களுக்கான சுயவருமானத்தினை அதிகரித்து பால்நிலை வேறுபாடின்றி சம அந்தஸ்த்தினை வழங்குவதன் ஊடாக பெண்களின் தலைமைத்துவத்தையும், விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி சுயமாக தீர்மானங்களை எடுக்கும் நிலைக்கு பெண் சமூகத்தினை உயர்த்தும் நோக்கில் அமைப்பினால் கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 01. சுய சார்புக் குழுக்களை அமைத்து இக்குழுக்களின் ஊடாக சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

சமூகப் பொருளாதார நிலையில் நலிவுற்று முரண்பாடுகளால் பாதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட மக்களை குழுக்களாக ஒன்றிணைத்து பால்நிலை, வயது, சமய, அரசியல் பாகுபாடு அற்ற நிலையில் வழிகாட்டல்கள், ஆலோசனைகள், உதவிகளை வழங்கி, அவர்கள் தமது சுய நடவடிக்கைகளின் ஊடாக நீடித்து நிலைத்திருக்கத் தக்கதும், கௌரவமானதுமான தன்னிறைவான வாழ்க்கையை வாழும் நிலையினை உருவாக்கும் நோக்கில் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள கிராமக் கிளைகளில் 273 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக் குழுக்களின் ஊடாக கிராம அபிவிருத்தி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சுய சார்புக் குழுக்களின் ஊடாக செயற்படுத்தப்படும் கிராம அபிவிருத்திச் செயற்திட்டங்கள்.**

**I. சமூக மேம்பாடு**

- மகளீர் மத்தியில் “நமக்கு நாமே” என்ற உணர்வினை ஏற்படுத்துதல்.
- சாதி,சமய வேறுபாடுகளை நீக்கி மகளீரிடையே நல்லிணக்கத்தை உருவாக்குதல்.
- சமூகத்திலும், குடும்பத்திலும் முடிவெடுக்கும் பொறுப்பினை பகிர்ந்தளிக்கச் செய்தல்.
- பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்தல்.

- மகளிருக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துதல்.
- சுகாதாரம், குடும்ப நலம் போன்றவற்றில் தெளிவினை உண்டாக்குதல்.
- கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபடுதல்.
- சமூக விழிப்புணர்வை உருவாக்குதல்.

## II. பொருளாதார மேம்பாடு

- அத்தியாவசிய, அவசர கடன் தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்.
- கடன் தேவைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்போரை சார்ந்து இருப்பதை முழுமையாக தவிர்த்தல்.
- சேமிப்பை அதிகரித்தல்.
- ஓய்வு நேரங்களில் வருவாய் ஈட்டும் தொழிலில் ஈடுபடுதல்.
- தொழில் திறன் பெற்று, குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான வழிவகை காணுதல்.
- பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பெற்று முன்னேறுவதற்கான திறனை வளர்த்தல்.
- உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யும் வகையில் விற்பனைத் திறனை வளர்த்தல்.

## III. திறன் வளர்த்தல்.

- பெண்களுக்கு பேசும் திறன், எழுதும் திறன், வாசிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.
- நல்ல தலைமைப் பண்புகளை வளர்த்தல்.
- முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தல்.
- நடைமுறை வாழ்க்கைக் கல்வியை கற்றுக் கொடுத்தல்.
- விடாமுயற்சி கொண்டு செயல்களை முடிக்கும் திறனை மேம்படுத்துதல்.
- தன்னம்பிக்கையினை வளர்த்தல்.
- பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகளை அறிந்து செயலாக்கத்தில் ஈடுபடச் செய்தல்.
- தகவல் தொடர்புத் திறனை வளர்த்தல்.
- பதிவேடுகள் பராமரிக்கும் திறனை வளர்த்தல்.
- குழுவாக இணைந்து சாதனைகள் புரிந்திடும் ஆற்றலை வளர்த்தல்.
- தொழில் திறன் பயிற்சி அளித்தல்.
- கணினி, மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தும் திறமைகளை வளர்த்தல்.
- திறன்களை வளர்த்துக் கொண்டு குடும்ப, கிராம, நகர்புற மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல்.
- சமூக நீதிக்காக போராடும் திறனை உருவாக்கல்.

கிராமக் குழுக்களின் கொள்திறனை மேம்படுத்தும் நோக்கில் குழுத் தலைவிகளுக்கான குழு வலுவூட்டல் தொடர்பான பயிற்சிகளானது இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் June 06,... திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளது. இதில் .... குழுத்தலைவிகள் கலந்து கொண்டுள்ளனர். இப்பயிற்சியின் ஊடாக சிறந்த குழு என்றால் என்ன? ஒரு குழு எவ்வாறு இருக்க வேண்டும், குழு நடைமுறைகள், சிறந்த குழுக்கூட்டம் பற்றியும், தலைவிகளின் முக்கிய பொறுப்புக்கள் பற்றியும் அறிவையும், தெளிவையும் பெற்றுள்ளனர்.

| **இல** | **பிரதேசம்** | |
|---|---|---|
| 1 | பொத்துவில் | |
| 2 | திருக்கோவில் | |
| 3 | காரைதீவு | |
| 4 | கல்முனை | |
| 5 | சம்மாந்துறை | |
| 6 | நாவிதன்வெளி | |
| | **மொத்தம்** | |

Diakonia திட்டத்தின் கீழ் வளவாளர் திரு.செர்ணலிங்கம் அவர்களைக் கொண்டு நல்லாட்சி தொடர்பான கருத்தரங்கானது 6 பிரதேசத்திலுள்ள குழத்தலைவிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப் பயிற்சியில் ...... குழுத் தலைவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளதுடன் தான் பெற்றுக்கொண்ட பயிற்சியினூடாக தமது குழுக்களை சிறந்த முறையில் வழிநடத்தி வருகின்றனர்.

| **இல** | **பிரதேசம்** | |
|---|---|---|
| 1 | பொத்துவில் | |
| 2 | திருக்கோவில் | |
| 3 | காரைதீவு | |
| 4 | கல்முனை | |
| 5 | சம்மாந்துறை | |
| 6 | நாவிதன்வெளி | |
| | **மொத்தம்** | |

- பிரதேச நிருவாகிகளுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தப்பட்டு பிரச்சனை தேவைகள் அறியப்பட்டுள்ளது.(குடிநீர், ஆவணங்கள்,வாசிகசாலை)

- சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ் 120 பழ மரக்கன்று வழங்குவதற்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு திட்முகாமையாளருக்கு பெயர்ப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.
- ஆவணங்கள் இல்லாத 147 உறுப்பினர்களின் விபரம் பெறப்பட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளது.
- வாழ்வாதார திட்டத்தினை மேம்படுத்துவதற்காக தாண்டியடி கிராமத்தில் நெல்குற்றும் இயந்திரம் பெறுவதற்காக காந்தி குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
- சுயதொழிலிற்கான ஊக்குவிப்பு உபகரணம் வழங்கப்பட்ட குழக்கள் தற்போது இத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். சந்தை வாய்ப்பு குறைவாகவுள்ளதாக கூறுகின்றனர்.
- பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டு குழக்களுக்கும் டுயடிநட அச்சிட்டுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அஸ்ரோத்திரா(விநாயகபுரம்-01) மகாலெட்சுமி,(தம்பிலுவில்-02)

கிளை செயற்பாடு – நாவிதன்வெளி

- ✓ *3500 குளிசை பக்கட்டுக்கள் செய்து வேப்பயடி, மத்தியமுகாம் ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.*
- ✓ *டெங்கு ஒழிப்பினை முன்னிட்டு 9 கிளைகளிலுமுள்ள 17 பொது இடங்களில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டதுடன் 58 கிணறுகளுக்கு ீரஜ ஊடாக குளோரின் பெற்று போடப்பட்டது.*
- ✓ *வேப்பையடி கிளையில் செயற்படும் அங்கத்தவர்கள் 69 பேர் சேர்ந்து 12000 ரூபா பணம் அறவிட்டு கலைமகள் பாடசாலைக்கு ஒன்றுகூடல் நடைபெறும் இடத்திற்கு கல் பதித்து கொடுக்கப்பட்டதற்கு பாடசாலை அதிபரினால் கிளை கௌரவிக்கப்பட்டு நினைவு சின்னம் வழங்கப்பட்டது.*
- ✓ *சவளக்கடை, குடியிருப்புமுனை ஆகிய கிளைகளுக்கு நீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் கிளை நிருவாகங்களினால் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு நீர் பெற்றுக் கொடுத்தமை.*
- ✓ *கிளை பொதுக்கூட்டங்களுக்கு பிரமுகவர்களை (ஆசிரியர்கள் மருத்துவதாது கிராமநிலதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திசங்கம்) அழைத்து அங்கத்தவர்களுக்கு பயன்தரக்கூடிய கருத்துக்களை வழங்கியமை.*

காரைதீவு – விசேட செயற்பாடுகள்.

- ⦿ 20.02.2013ம் திகதி இந்து கலாச்சார மன்றம் , னுளு ழுககைஉந இன் தலைமையில் காரைதீவைச் சேர்ந்த 170 சுவாட் அங்கத்தவர்கள் , பாடசாலைகள், ஆலய நிர்வாகங்கள், விளையாட்டு கழகங்கள் , பாலர் பாடசாலைகள் , மற்றும் ஏனைய நிறுவனங்கள் இணைந்து மது ஒழிப்பு பேரணி நடாத்தப்பட்டது.
- ⦿ 15.03.2013ம் திகதி காரைதீவுப் பிரதேசத்தில் புதிய மது சாலை அமைப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்ட வேளையில் ஆலய தர்மகத்தா , இந்து கலாச்சார மன்ற உறுப்பினர்கள் , ஏனுழு, பிரதேச தலைவி உட்பட 10 பேர் இணைந்து அந்த இடத்தை தடுத்து நிறுத்தியமை.

- 
- 31.05.2013ம் திகதி காரைதீவு சாரதா இல்ல மாணவர்கள் 17 பேருக்கு சப்பாத்து , சொக்ஸ் என்பன சுவாட் அங்கத்தவர்களினால் வாங்கிக் கொடுக்கப்பட்டது.
- இயலாமைக்கு உட்பட்ட ஒருவருக்கு (மிகவும் கஸ்ரமான குடும்பம்) கிளை -04 சுவாட் அங்கத்தவர்களினால் குழுத் தலைவிகள் ஊடாக 5000∴- பணம் அறவீடு செய்து கிளைத் தலைவி மூலம் வழங்கப்பட்டது
- 19.10.2013ம் திகதி சமூக ஆர்வலர்கள் கூட்டம் மு.பிறேமலதன் அவர்களின் தலைமையில் பிரதேச காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 45 பிரமுகர்கள் கலந்து கொண்டு பிரதேசத்தின் தேவைகள்,பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.
- 

கிளைச் செயற்பாடு

- அனைத்துக் கிளைகளிலும் ஆலயங்கள் , பாடசாலைகள் , வைத்தியசாலைகள் , பொது இடங்களில் மாதாந்தம் சிரமதானம் மேற்கொள்ளப்படுகின்றது.
- நேரு குழு , கண்ணகி குழு அங்கத்தவர்களினால் மாதாந்தம் 500 வில்லைப் பைக்கற்றுகள் வைத்தியசாலைக்கு ஒட்டிக் கொடுக்கின்றார்கள்.
- கிளைக் கூட்டத்தில் மாதாந்தம் பிரமுகர்களைக் கொண்டு கல்வியின் முக்கியத்துவம் , சுகாதாரம் போசாக்கு , சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றது.
- கிளை ரீதியாக டெங்கு ஒழிப்பு சிரமதானங்கள் செய்தல், பொலித்தீன் பாவனை குறைப்பு மேற்கொள்ளப்படுகின்றது.
- அங்கத்தவர்களின் கிணறுகளுக்கு குளோரின் போடப்படுகின்றது. இதனால் கிணற்றுத் தண்ணீர் தூய்மையாக உள்ளதுடன் இக்குடும்பங்கள் தற்பொழுது நோயற்ற குடிநீரை பருகுகின்றார்கள்.
- இவ்வருடம் கிளை – 05 இல் 10 இடைவிலகிய மாணவர்கள் ,பெற்றோர்களை பிரதேச தலைவி , கிளைநிர்வாகங்கள் சந்தித்து பின்னர் சண்முக வித்தியாலய அதிபருடன் கதைத்து மீண்டும் பாடசாலையில் சேர்த்துள்ளர்.
- அனைத்துக் கிளைகளிலும் குழு ரீதியாக மின்சாரம் , நீர் சிக்கனத்தை குறைக்கும் முகமாக மாதாந்தம் மின்சாரம் , தண்ணீர் பட்டியலை ஒப்பீடு செய்து அறிக்கை பேணப்படுகின்றது.
- கிளை ரிதியாக ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு ஆவணங்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.
- செயற்படாத அங்கத்தவர்களை கிளை நிர்வாகங்கள் சந்தித்து சேமிக்க வைக்கின்றார்கள்.
- குழு அங்கத்தவர்களினால் மாதாந்தம் குழுக் கூட்டத்தில் சீட்டு போடப்பட்டு வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்கிக் கொடுக்கப்படுகின்றது.
- வள்ளி குழு அங்கத்தவர்களினால் மிளகாய் தூள் , மஞ்சள் தூள் இடித்து விற்பனை செய்து வருகின்றார்கள்.
- குமரன் குழு அங்கத்தவர்கள் குரக்கன் மா பைக்கற் பண்ணி தங்களது குழு , கிளை அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்கின்றார்கள்.
- கிளை – 05 க.இந்திராணி எனும் அங்கத்தவர் சோளன் பொரி பைக்கற் பண்ணி தங்களது குழு , கிளை அங்கத்தவர்களுக்கு விற்பனை செய்து வருகின்றார்.
- 

சம்மாந்துறை.

- ❖ தரம் 1-6 வரையான 74 மாணவர்களுக்கு சகல பாடங்களும் உட்பட்ட மாலைநேர இலவச வகுப்பு நடத்தப்பட்டுவருகின்றது மேலும் பாடசாலை இடைவிலகிய 6 மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து தொடர் கல்வி கற்றுக்கொன்டிருக்கின்றனர். அத்துடன் இலவச வகுப்பு நடத்தப்படும் 1 இடத்தில் வகுப்பறைக்கான கூரை மேய்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.
- ❖ சரஸ்வதி பாலர் பாடசாலைக்கு சுற்று வேலி இல்லை இதனால் மீனவர் கூட்டுறவு சங்கத்திடம் நிதி உதவி பெற்று சுற்றுவேலி அமைக்கப்பட்டுவருகின்றது.
- ❖ பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீதிகள் வடிகான்கள் , ஆலயங்கள், மதஆலயங்கள், சேமக்காலைகள் போன்ற பொது இடங்கள் சிரமதானம் செய்யப்பட்டடு சூழல் சுத்தம் பேணப்பட்டுவருகின்றது.
- ❖ 5குழுக்கள் இனைந்து கூட்டுப்பசளை தயாரித்து வளமுள்ள பயிர்களை வளர்ப்பதுடன் சூழல் சுத்தம் பேணப்பட்டுவருகின்றது.
- ❖ எமது அங்கத்தவரில் 200க்கு அதிகமானோர் வீட்டுத் தோடட்டம் செய்து சுய உற்பத்தியில் வாழ்கின்றனர்.
- ❖ புதிய வருமானம் ஈட்டும் தொழில்முயற்ச்சியில் ஈடுபட 40அங்கத்தவருக்கு விழிப்புணர்வு வழங்கி 17 பேர் அதிக வருமானம் பெறும் தொழில்முயற்ச்சியில் ஈடுபடுகின்றனர்.(நெல் வியாபாரம், கால்நடை வளர்ப்பு,)
- ❖ 98 சிறுவர்களை கொன்டு 2 இடங்களில் 2 தடவைகளில் சிறுவர் தின நிகழ்வு கொன்டாடப்பட்டது.
- ❖ 03 இளைஞ்சர் கழகம் உருவாக்கப்பட்டதுடன் இளைஞ்சர் கழகம் 02 புனரமைப்பு செய்து செயற்பாட்டு வருகின்றது.
- ❖ 33 சமூக ஆர்வலர்களைக் கொன்ட குழு உருவாக்கப்பட்டு சமூக பிரட்ச்சினைகளுக்கு தொடர்பான கலந்துரையாடலும் அதற்க்கான தீர்வும் முன்வைக்கப்படுகின்றது.
- ❖ 16 கினறுகளுக்கு குளோரின் இடப்பட்டு சுத்தமான குடிநீர் பெற உதவி செய்யப்பட்டுள்ளது.
- ❖ மாதாந்தம் எமது கிளை , பிரதேச கூட்டங்களுக்கு அரச அதிகாரிகள் அழைக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு பயன் தரு கருத்துக்கள் வழங்கல். (கைத்தொழில்முயற்ச்சி, பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல், ஆவணங்கள் பெறல், சிறுவர் பாதுகாப்பு, மற்றும் பல)

**திருக்கோவில் -01,2**

890 குடும்பங்களின் கிணறுகளிற்கு ஏனுழுஇஅங்கத்தவர்கள்இ தலைவிகளால் குளோரின் போடப்பட்டுள்ளது.

2013.10.15 கை கழுவும் தினத்தை முன்னிட்டு ஸ்ரீஜ திரு.ப.சுதாகரன் அவர்களால் 63 அங்கத்தவர்களுக்கு சுகாதாரமான முறையில் கை கழுவுதல் பற்றி விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது, இதற்கான கையேடுகளும் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இளந்தளிர்,கங்கா குழுவினால் சரம் கட்டி வாடகைக்கு விடப்பட்டு அதில்வரும் வருமானத்தை விசேடசேமிப்பாக வைப்பிலிடுகின்றனர்.

**தாண்டியடி**

தாண்டியடி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்,அ.த.க.பாடசாலை களில் நவராத்திரி விழா இனை முன்னிட்டு ஒருநாள் பூசையை தாண்டியடி கிளை அங்கத்தவர்கள், ஏனுழு பொறுப்பேற்று ரூபா 7500 செலவில் நடாத்தியுள்ளனர்.

2013.10.13 டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தினை முன்னிட்டு 30 அங்கத்தவர்கள்,ஏனுமு இணைந்து பொது இடங்களில்( பல் தேவைக்கட்டிடம், கிளினிக் சென்றர்) சிரமதானம் செய்துள்ளனர்.

திரேசா குழவில் பழமரக்கன்றுகள் உற்பத்தி செய்து ஏனைய குழக்களிடையே பகிர்ந்து கொள்கின்றனர், வேறு இடங்களிலிருந்து நஞ்சற்ற பப்பாசி, மாம்பழம், வாழைப்பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றனர்.

**விநாயகபுரம் -01,02,03**

ீர்ஜ,குழத்தலைவி,ஏனுமு் சேர்ந்து 1305 குடும்பங்களின் கிணறுகளிற்கு குளோரின் போட்டுள்ளனர்.

விநாயகபுரம் -01- 15 அங்கத்தவர்களுக்கு ீர்ஜ திரு.ப.சுதாகரனால் பற்சுகாதாரம், இளவயது திருமணம், கற்பிணித்தாய்மாரின் போசாக்கு நிலைபற்றிய கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளது.

விநாயகபுரம் -03 - 54 உறுப்பினர்களுக்கு பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான கருத்தரங்கு னுழு திருமதி.நா.ஜெயதர்சினி ஆல் நடாத்தப்பட்டுள்ளது

தம்பட்டை - 37 அங்கத்தவர்களின் கிணறுகளிற்கு குளோரின் ஏனுமு குழுத்தலைவியால் போடப்பட்டது.

விநாயகபுரம் -04 - ஏனுமு.க.சுசிலாதேவியால் 4 இடைவிலகிய மாணவர்களை ீர்ஜ திரு.ப.சுதாகரன் ஊடாக சந்தித்து இருவரை பாடசாலைக்கு சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கிளை ரீதியாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக 6 பிரதேசத்திலும் கிளை ரீதியாக கிளைக்கூட்டம், குழுக்கூட்டம், குழுத்தலைவிகள் கூட்டம் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

10.1. சுகாதார மேம்பாடு:-

**திறன் மேம்பாட்டுத் திட்டம் :-**

- ❖ கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களது வேலைகள் தொடர்பான இலக்குகளை நிர்ணயித்து செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகள் தொடர்பான திறனை மேம்படுத்தும் நோக்கில் பிரதேச கிராமக்கிளைகளில் பணியாற்றுவரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 15பேரை உள்ளிணைத்து இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

- ❖ இளையோர் திறன் மேம்பாடு தொடர்பாக அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 32 உள்ளிணைத்து இணைப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் இரு விழிப்புணர்வுப் பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

- ❖ நிறுவனக் கட்டமைப்புக்கள் தொடர்பாகவும், கிராம மட்ட, பிரதேச மட்டத்தில் நிர்வாகிகளது கடமைகள், பொறுப்புக்கள், கண்காணிப்பு முறைமைகள் தொடர்பாக 6 பிரதேச நிர்வாக உறுப்பினர்கள் 66 பேரையும் உள்ளிணைத்து இணைப்பாளர் அவர்களினால் இரு பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

- ❖ பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகளை மேம்படுத்தல் தொடர்பாக பாலர் பாடசாலை ஆசிரியர்கள் 41 பேரை உள்ளிணைத்து கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

- 
- கிளை ரீதியாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக 6 பிரதேசத்திலும் கிளை ரீதியாக கிளைக்கூட்டம், குழுக்கூட்டம், குழுத்தலைவிகள் கூட்டம் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ன.

- கிராமமட்ட பணியாளர்களுக்கான (FC,DMO) வாராந்த மீளாய்வுக்கூட்டமானது திறன் மேம்பாட்டுப் பணிப்பாளர் திருமதி. கௌரிஸ்வரன் சுகிர்தினி அவர்களினால் வாராந்தம் வியாழக்கிழமைகளில் நடாத்தப்பட்டு பிரதேச, கிராம மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், பின்னடைவுகள் குறித்து ஆராயப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் அடிப்படையில் 21 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது.

- திட்டச் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பாகவும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் இவ்வாண்டில் 08 மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

❖ நிறுவன செயற்பாடுகள், மாற்றங்கள் குறித்து உபாயத்திட்டங்களை வகுத்து புதிய தீர்மானங்கள், நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் அமைப்பினால் மாதாந்தம் ஆளுனர்சபைக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றது.

03.05.2013. நாவிதன்வெளி சுவாட் பிரதேச பணிமனையில் இளைஞர், யுவதிக்கான கொள்திறன் விருத்தி பயிற்சி திரு. செந்துராசா சேர் அவர்காளால் நடைபெற்றது. இதில் இளைஞர் யுவதிகளால் சமூகத்தில் ஆற்றப்பட வேண்டிய செயற்பாடுகள், தற்போது கிராமத்தில் உள்ள பிரச்சினைகள், தீர்க்கும் வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டது.

18.06.2013. நாவிதன்வெளி சுவாட் பிரதேச பணிமனையில் இளைஞர், யுவதிக்கான கொள்திறன் விருத்தி பயிற்சி நடைபெற்றது. இதில் இளைஞர் யுவதிகளால் சமூகத்தில் ஆற்றப்பட வேண்டிய செயற்பாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள். தற்போது கிராமத்தில் உள்ள பிரச்சினைகள், தீர்க்கும் வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டது.

14.09.2013ம் திகதி 31 இளைஞர் யுவதிகள் (08 ஆண்கள், 23பெண்கள்) நாவிதன்வெளிப்பிரதேசத்தில் கூடி சமூக செயற்பாடுகள் பற்றி திட்டமிட்டுள்ளார்கள்.

**11. இவ்வாண்டில் நிதி வழங்கிய நிறுவனங்கள் பற்றிய விபரம்.**

**TOTAL - 27,606,125.44**

**12. நடைபெற்ற நிகழ்வுகள்.**

**01. புதுவருட நிகழ்வு** :- 2010ம் ஆண்டின் புதுவருட நிகழ்வானது சுவாட் தலைமையலுவலக பயிற்சி நிலையத்தில் ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா அவர்களின் தலைமையில் 2010.01.01ம் திகதி நடாத்தப்பட்டது. இதில் பிரதம அதிதிகளாக …………, கலந்து சிறப்பித்தனர்.

**02. சர்வதேச மகளீர் தினம்.**

சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு சுவாட் அமைப்பின் கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி, திருக்கோவில் ஆகிய பிரதேச காரியாலயங்களில் இப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர்களின் தலைமையில் சர்வதேச மகளீர் தினவிழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக GS, DS, உதவிக் கல்விப்பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கிளை நிர்வாக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டதுடன் பிரதேச, கிளை மட்டத்தில் உயர் நிலையில் முன்மாதிரியாகச் செயற்படும் பெண்களுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

**03. இவ்வருட நவராத்திரியினை முன்னிட்டு 17.10.2010ம் திகதி விஜயதசமி நிகழ்வு கொண்டாடப்பட்டது.**

04. சர்வதேச சிறுவர்தின நிகழ்வை முன்னிட்டு இவ்வாண்டில் காரைதீவு, பொத்துவில் பாலர் பாடசாலைகளில் மாணவர் கலை நிகழ்ச்சிகள் நடாாத்தப்பட்டது.

13. பணியாளர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்.

14. இவ் வருடம் எமது அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.

**பிரதேச நிர்வாகக்கூட்டம்.**

பிரதேச நிருவாகத்தில் உள்ளவர்கள் பெண்கள் அபிவிருத்தி சங்கம், விவசாய அபிவிருத்திச் சங்கம், முன்பள்ளி ஆசிரியர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றில் 05 பெண்கள் நிருவாகப் பொறுப்பு வகித்து வருகின்றார்கள்

கிளைக்கூட்டம், பிரதேச கூட்டம், நிகழ்வுகள் ஆகியவற்றில் நேரத்தை திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றார்கள்,

சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள்.

சமூகபொது நிகழ்வுகளில் பங்குகொண்டு உதவியளித்து வருகின்றார்கள்.

தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றாார்கள்.

குடும்ப கட்டுக்கோப்பு, பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் அதிகரித்துள்ளது.
முன்னின்று கதைக்கக்கூடிய ஆற்றல் வளர்ந்துள்ளது.

நாவிதன்வெளிப்பிரதேசத்தில் 45 குழுவுக்குள் ஒவ்வொரு குழுவும் தீர்மானங்களை எடுத்து அதாவது சிற்றுண்டி செய்து விற்றல், கிடுகு இழைத்து விற்றல், மரங்கண்று உற்பத்தி, மொத்தமாக கடையில் பொருட்களை வாங்கி அதனை குழுவுக்குள் பிரித்து விற்பனை செய்தல், கழிவுப்பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி பொருட்களை செய்தல், விற்பனை செய்து வருமானத்தை பெருக்கி வருகின்றார்கள்.

12குழுக்கள் தனித்தனி குழுவாக குழுச்சீட்டு பிடித்து அதில் வரும் வருமானத்தை வீட்டுக்குத்தேவையான பொருட்கள் வாங்குதல், சேமிப்பை அதிகரித்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுப்பட்டு வருகின்றார்கள்.

சமூகத்தில் ஏற்படும் டெங்கு பிரசிசனைக்கு சிரமதானம் செய்தல், வறிய பிள்கைளின் கல்விக்கு கொப்பி, வாங்கி கொடுத்தல் போன்ற பொதுப்பிரச்சினை உதவியும் வருகின்றார்கள்

சக்தி வளப்பயன்பாட்டின் கிழ் அணகி அடுப்பு, மரத்துாள் அடுப்பு பாவனை ஊக்குவித்துள்ளார்கள். இப்பிரதேசத்தில் 115பேர் இவ் அடுப்பினை பாவிக்கின்றார்கள்.

அங்கத்தவர்கள் மின்சார பாவனையை சிக்கனமாக பயன்படுத்தி வருகின்றார்கள்

பொலித்தீன் பாவனையை குறைக்க 12பேர் சேர்ந்த ஒரு குழு பேப்பர் வேக் தொடர்ந்தும் செய்து விற்பனை செய்து அதில் வரும் வருமானத்தை தங்கள் குழுவின் வருமானமாக பெருக்கி வருகின்றார்கள்.